**செய்தி வெளியீடு எண்: 150** **நாள்:07.03.2013**

<u>செய்தி வெளியீடு</u>

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காண்''

என்ற மகாகவி பாரதியாரின் சொல்லிற்கேற்ப, பெண்களை போற்றிடும் வகையிலும், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்திடும் வகையிலும் பெண்களின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆண்டுதோறும் சர்வதேச மகளிர் தினத்தன்று ''அவ்வையார் விருது'' எனும் உயரிய விருது வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த ஆண்டு உத்தரவிட்டிருந்தார்கள். இந்த விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் சால்வை ஆகியவை வழங்கப்படும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி சென்ற ஆண்டு முதல் "அவ்வையார் விருது" வழங்கப்படுகிறது.

2013-ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதுக்கு, புற்று நோய் மருத்துவத் துறையில் சிறந்த சேவையாற்றி வரும் சென்னை அடையாறில் உள்ள புற்று நோய் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் வி. சாந்தா அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விருதினை டாக்டர் வி.சாந்தா அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.3.2013 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி கௌரவிப்பார்கள்.

*********

வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 7-3-2013.